வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

நாள்: 02.08.2024 நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

புதுடெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில், 2 நாள் ஆளுநர்கள் மாநாடு, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தலைமையில், இன்று தொடங்கி உள்ளது.

மத்திய-மாநில அரசுகளுக்கு இடையே திறம்பட்ட பாலமாக ஆளுநர்கள் செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை புதுடெல்லியில், வேளாண் பொருளியல் வல்லுனர்களின் 32ஆவது சர்வதேச மாநாட்டைத் தொடக்கி வைக்கிறார்.

புதுச்சேரியில், இலவச அரிசி மற்றும், மானிய விலையில் அத்தியாவசிய பொருட்கள், ரேஷன் மூலம் வழங்கப்படும் என, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, பட்ஜெட்டில் அறிவித்துள்ளார்.

---

ஆளுநர் மாநாடு 1 (18)

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று, புதுடெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில், 2 நாள் ஆளுநர்கள் மாநாட்டை தொடக்கி வைத்தார். ஜனநாயகம் சுமூகமான முறையில் செயல்பட, அனைத்து மத்திய ஏஜென்சிகளும், மாநில அரசுகளுடன் கூடுதல் ஒருங்கிணைப்பை பராமரித்தல்

அவசியம் என்றும், இதை எப்படி சாதிக்கலாம் என்பதுகுறித்து, மாநிலங்களின் அரசியல் சாசன தலைவர்கள் என்ற முறையில், ஆளுநர்கள் சிந்திக்க வேண்டும் என்றும், குடியரசுத் தலைவர் கேட்டுக் கொண்டார். அரசின் சமூக நலத்திட்டங்கள் குறித்து மக்களின் விழிப்புணர்வை அதிகரிப்பதும், ஆளுநர்களின் அரசியல் சாசனப் பொறுப்புதான் என்றும், குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் கூறினார். பிரதமர் திரு. நரேந்திர மோடி இந்நிகழ்ச்சியில் பேசுகையில், மத்திய-மாநில அரசுகளுக்கு இடையே திறம்பட்ட பாலமாக ஆளுநர்கள் செயல்பட வேண்டும் என்றும், பழங்குடியினர் உட்பட அனைத்து மக்கள் மற்றும் சமூக அமைப்புகளுடன் நேரடி தொடர்பில் இருக்க வேண்டும் என்றும் கூறினார்.

அனைத்து மாநிலங்களின் ஆளுநர்களும் பங்கேற்றுள்ள இம்மாநாட்டில், 3 புதிய குற்றவியல் சட்டங்களின் அமலாக்கம், உயர்கல்வித் துறைக்கான சீர்திருத்தங்கள், மற்றும், முன்னுரிமைத் துறைகளின் வளர்ச்சி குறித்து, இம்மாநாட்டில் முக்கியமாக விவாதிக்கப் படுகிறது. மாநில ஆளுநர்கள் பல



குழுக்களாக பிரிந்து, அலுவல் பட்டியலில் இடம்பெற்றுள்ள விஷயங்களை விவாதிக்கிறார்கள். மாநாட்டின் இறுதி அமர்வில், இக்குழுவினர் தங்களின் பரிந்துரைகளை, குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், மற்றும், பிரதமரிடம் எடுத்துக் கூற உள்ளனர்.

---------------------------------

*மோடி-மாநாடு (17)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை புதுடெல்லியில், வேளாண் பொருளியல் வல்லுனர்களின் 32ஆவது சர்வதேச மாநாட்டை தொடக்கி வைக்கிறார். 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் இம்மாநாடு, 65 ஆண்டு இடைவெளிக்கு பின்னர், தற்போது இந்தியாவில் நடத்தப்படுகிறது. நீடித்த வேளாண்-உணவுக் கட்டமைப்பிற்கு மாறுதல் என்னும் மையக் கருத்து அடிப்படையில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள இந்த 3 நாள் மாநாட்டில், பருவ நிலை மாற்றம், இயற்கை வளங்களின் இயல்பான தர மாற்றம், சாகுபடி செலவுகளின் அதிகரிப்பு போன்ற உலகளாவிய பிரச்சனைகளால், வளங்குன்றா வேளாண்மையின் தேவை அதிகரித்து வருவது குறித்து, முக்கியமாக விவாதிக்கப்படும். இப்பிரச்சனைகளை சமாளிப்பதில், இந்தியாவின் நேர்மறை அணுகுமுறைகளையும், வேளாண்சார் கொள்கைகள் மற்றும் ஆராய்ச்சிகளில், நாடு எட்டி உள்ள முன்னேற்றங்களையும், இந்தியா இம்மாநாட்டில் எடுத்துக் கூற உள்ளது. இந்திய இளம் ஆராய்ச்சியாளர்கள், தங்களின் பணிகளை உலகிற்கு வெளிப்படுத்தவும், வேளாண் ஆராய்ச்சி அமைப்புகளின் சர்வதேச தொடர்புகளை வலுப்படுத்தவும், உகந்த வாய்ப்பாக இம்மாநாடு அமைய உள்ளது. சுமார் 75 நாடுகளில் இருந்து, சுமார் ஆயிரம் பிரதிநிதிகள், மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

---------------------------------

*பிங்கலி* (11)

தேசிய கொடியை வடிவமைத்த விடுதலை போராட்ட வீரர் பிங்கலி வெங்கையா பிறந்தநாளான இன்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி, அன்னாருக்கு புகழாரம் சூட்டி உள்ளார். வரும் 9 முதல், 15ஆம் தேதி வரை, எல்லா வீடுகளிலும் தேசிய கொடி ஏற்றும் வகையிலான ஹர் கர் திரங்கா இயக்கத்திற்கு பொது மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்றும், தேசிய கொடியுடன் கூடிய செல்ஃபி படங்களை, ஹர் கர் திரங்கா இணைய தளத்தில் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுச்சேரியின் ஏனாம் பகுதியில், ஃபெர்ரி சாலையில் உள்ள பிங்கலி வெங்கையா சிலைக்கு, மண்டல நிர்வாக அதிகாரி திரு. முனுசாமி, காவல் துறை கண்காணிப்பாளர் திரு. ராஜசேகரன் உள்ளிட்டோர் அரசு சார்பில், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

---------------------------------

*ஆயுஷ்மான்* (12)

ஆயுஷ்மான் பாரத்-பிரதமரின் ஜன் ஆரோக்கியா திட்டத்தின் கீழ், இதுவரை 34 கோடிக்கும் மேற்பட்ட எண்ணிக்கையில், ஆயுஷ்மான் அட்டைகள் தயாரிக்கப்பட்டு உள்ளதாக, மத்திய அரசு தெரிவித்துள்ளது. சுகாதாரத் துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ், இன்று மக்களவையில், எழுத்து மூலமான பதில் ஒன்றில் இதை தெரிவித்தார். டெல்லி தலைநகர பிரதேசம், ஒடிசா, மற்றும், மேற்குவங்கம் அல்லாத 33 மாநிலங்கள்

மற்றும் யூனியன் பிரதேசங்களில் இத்திட்டம் அமலாகி வருவதாகவும், இதுவரை இத்திட்டத்தின் கீழ், மொத்தம் 7 கோடியே 37 லட்சம் பேர், உள்நோயாளிகளாக, மொத்தம் 1 லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள சிகிச்சைகளை, மருத்துவமனைகளில் பெற்றுள்ளதாகவும், அவர் கூறினார். நாடு முழுவதும் இதற்கென, 29 ஆயிரம் மருத்துவமனைகள் அங்கீகரிக்கப் பட்டுள்ளதாக, அவர் மேலும் தெரிவித்தார்.

----------------------------------

கொரோனா (7)

கொரோனா தொற்றினால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கான பிஎம்-கேர்ஸ் திட்டத்தின் கீழ், 4 ஆயிரத்து 532 குழந்தைகள் பயன் பெற்றுள்ளதாக, மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி அன்னபூர்ணா தேவி, இன்று மக்களவையில், எழுத்து மூலமான பதில் ஒன்றில் தெரிவித்தார். இதில் அதிகபட்சமாக 855 குழந்தைகள், மகாராஷ்ட்ர மாநிலத்திலும், அதற்கு அடுத்தபடியாக, 467 குழந்தைகள், உத்தரபிரதேசத்திலும், பயன் பெற்றுள்ளதாக, அவர் கூறினார்.

----------------------------------

சாலை (10)

2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல், பிரதமரின் கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ், சுமார் 1 லட்சத்து 3 ஆயிரம் கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலைகள் அமைக்கப் பட்டுள்ளதாக, மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்

திரு. ஷிவ்ராஜ் சிங் சவுகான், இன்று மாநிலங்களவையில், எழுத்து மூலமான பதில் ஒன்றில் தெரிவித்தார். அதிகபட்சமாக 16 ஆயிரம் கிலோ மீட்டர் சாலைகள் உத்தரபிரதேசத்திலும், அதற்கு அடுத்தபடியாக, 9 ஆயிரத்து 295 கிலோ மீட்டர் சாலைகள் மத்திய பிரதேசத்திலும் அமைக்கப் பட்டுள்ளதாக அவர் கூறினார். 25 ஆயிரம் கிராமங்களுக்கு, எல்லா பருவங்களுக்கும் ஏற்ற சாலை இணைப்பு வழங்கும் வகையில், 4ஆம் கட்ட கிராமச் சாலைகள் திட்டம் விரைவில் தொடக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

----------------------------------

பட்ஜெட் *1 (18)*

புதுச்சேரியில், நிதித் துறை பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் திரு. ரங்கசாமி, நடப்பு நிதியாண்டிற்கான மாநில அரசின் முழு பட்ஜெட்டை இன்று சட்டமன்றத்தில் தாக்கல் செய்தார். 12 ஆயிரத்து 700 கோடி ரூபாய்க்கான இந்த பட்ஜெட்டில், வருவாய் செலவினங்களுக்கு, 10 ஆயிரத்து 970 கோடி ரூபாயும், மூலதன செலவினங்களுக்கு, ஆயிரத்து 730 கோடி ரூபாயும், ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. மாநில அரசின் வருவாய் பற்றாக்குறை 336.16 கோடி ரூபாயாகவும், நிதிப் பற்றாக்குறை, ஆயிரத்து 113.31 கோடி ரூபாயாகவும், மதிப்பிடப் பட்டுள்ளது.

பொது வினியோகக் கட்டமைப்பில், நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான ஸ்மார்ட்-பிடிஎஸ் திட்டம், புதுச்சேரி மாநிலத்தில் இவ்வாண்டு முதல் அமல்படுத்தப்படும் என்றும், இலவச அரிசி, மற்றும்,

மானிய விலையில் சர்க்கரை, சமையல் எண்ணெய் மற்றும் பருப்பு வகைகள் வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் பட்ஜெட் உரையில் அறிவித்தார். குடும்ப அட்டை தொடர்பான அனைத்து சேவைகளும், பொது சேவை மையங்கள் மூலம் இணைய வழியில் வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

மீன்பிடி தடைக்காலத்தில் மீனவர்களுக்கு வழங்கப்படும் 6 ஆயிரம் ரூபாய் நிவாரணம், 8 ஆயிரம் ரூபாயாகவும், 3 ஆயிரம் ரூபாய் மழைக்கால உதவி, 6 ஆயிரம் ரூபாயாகவும், உயர்த்தி வழங்கப்படும் என முதலமைச்சர்

பட்ஜெட் *2 (18)*

அறிவித்தார். 6 முதல், 12ஆம் வகுப்பு வரை, அரசுப் பள்ளியில் பயின்று, இளநிலை பட்டப் படிப்பில் சேரும் மாணவர்களுக்கு, மாதம் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை 3 ஆண்டுகளுக்கு வழங்கப்படும் என்றும், 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கு, நீட் தேர்வுக்கான பயிற்சி மையம் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இனத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவிகள் மற்றும் பணிபுரியும் மகளிர் 500 பே ருக்கு, இருசக்கர வாகனம் வாங்க, 1 லட்சம் ரூபாய் வரை நிதி உதவி வழங்கப்படும் என்றும், மண்ணின் மகள் திட்டத்தின் கீழ், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த பெண்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் மானியத்துடன் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

கடலூர் சாலை ஏஎஃப்டி பஞ்சாலை அருகே, ரயில்வே துறையுடன் இணைந்து, மேம்பாலம் கட்டும் பணிகள் விரைவில் தொடங்கும் என்றும்,

பிள்ளைச்சாவடி முதல் கனபதிசெட்டிக்குளம் வரை, கடல் அரிப்பை தடுப்பதற்கான இடைக்கால அவசரத் தடுப்புகள், நபார்டு வங்கி நிதி உதவியுடன், 22 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்றும், திரு.ரங்கசாமி தெரிவித்தார். இந்திராகாந்தி சிலைக்கும், ராஜீவ்காந்தி சிலைக்கும் இடையே, 500 கோடி ரூபாய் மதப்பீட்டில் மேம்பாலம் அமைக்க, விரிவான திட்ட அறிக்கை மத்திய சாலை போக்குவரத்து மற்றும்

*பட்ஜெட் 3 (13)*

நெடுஞ்சாலைத் துறை அமைச்சகத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பாரதியார் மற்றும் பாரதிதாசன் அருங்காட்சியகங்கள் மேம்படுத்தப்படும் என்றும், காரைக்கால் பழைய நீதிமன்ற வளாகத்தில், அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்றும், முதலமைச்சர் அறிவித்தார். புகைப்பட கலைஞர்கள் மற்றும் பேச்சாளர்களுக்கும் புதுவை கலைமாமணி விருது, வீடுகளில் மாடித் தோட்டம் அமைக்க 5 ஆயிரம் ரூபாய் மதிப்பில் இலவச உபகரணங்கள், இந்திராகாந்தி அரசு பொது மருத்துவமனையில், ஆஞ்சியோ பிளாஸ்டி உள்ளிட்ட சிகிச்சைகளுக்கு நவீன உபகரணங்கள், காவல் துறையில், எஞ்சியுள்ள காலி இடங்களை நிரப்ப நடவடிக்கை உட்பட பல்வேறு அறிவிப்புகளும் முதலமைச்சரின் பட்ஜெட் உரையில் இடம்பெற்றன. பட்ஜெட் தாக்கல் முடிந்தவுடன், சட்டமன்றத்தின் அலுவல்களை வரும் திங்கட் கிழமை

காலை 9.30 மணி வரை, ஒத்தி வைப்பதாக, பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம் அறிவித்தார்.

----------------------------------

விடுமுறை (5)

நாளை ஆடிப்பெருக்கு திருநாளை ஒட்டி, புதுச்சேரியின் அனைத்து 4 பிராந்தியங்களிலும், அரசுப் பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது. கோடை விடுமுறை நீட்டிக்கப் பட்டதை ஈடுகட்டும் வகையில், சனிக்கிழமைகளிலும் பள்ளிகள் இயங்கும் என கல்வித் துறை ஏற்கனவே அறிவித்திருந்த நிலையில், இன்றைய அறிவிப்பு வெளியாகி உள்ளது. நாளை சனிக்கிழமை விடுமுறையை ஈடுகட்டுவதற்கான வேலை நாள், பின்னர் அறிவிக்கப்படும் என்றும் கல்வித் துறை தெரிவித்துள்ளது.

----------------------------------

குலோத்துங்கன் (7)

வரவிருக்கும் வடகிழக்கு பருவமழை காலத்தில் மழை நீரை சேகரிக்க ஏதுவாக, புதுச்சேரி மாவட்டததில் உள்ள நீர் நிலைகளை தூர்வாருதல் குறித்தும், ஜல் சக்தி அபியான் மழை நீர் சேகரிப்புத் திட்டத்திற்கான செயல் திட்டத்தை தயாரிப்பது குறித்தும், மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் இன்று, அதிகாரிகளுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடத்தினார். உள்ளாட்சி, பொதுப்பணி, ஊரக வளர்ச்சி, வேளாண்மை மற்றும் வனத்துறை சார்ந்த அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

----------------------------------

ஏ□ாம்-முனுசாமி (6)

ஏனாமில், பல்வேறு அரசு துறைகளுக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மேல்நிலை எழுத்தர்கள், மற்றும், இதர ஊழியர்களுக்கு, பகுதி நேர அடிப்படையில், தகவல் தொழில்நுட்ப பயிற்சி அளிப்பதற்கான, 3 மாத சான்றிதழ் வகுப்பை, மண்டல நிர்வாக அதிகாரி இன்று தொடக்கி வைத்தார். ஏனாமில் உள்ள ரோமன் கத்தோலிக்க தேவாலயத்தில், நன்கொடை நிதி மூலம் கட்டப் பட்டுள்ள புதிய கட்டிடங்களையும் அவர் திறந்து வைத்தார்.

---------------------------------

வானிலை (8)

மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மணிக்கு 40 கிலோ மீட்டர் வரையிலான வேகத்தில் தரைக் காற்று வீசக்கூடும் என்றும், வரும் 8ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. மன்னார் வளைகுடா உட்பட தமிழகத்தின் கடலோர பகுதிகளுக்கும், மத்திய மேற்கு வங்கக் கடல் உள்ளிட்ட வங்கக் கடல் பகுதிகளுக்கும் மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

---------------------------------

வயநாடு (11)

கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்தில், நிலச்சரிவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 300-ஐ தாண்டி, 308 ஆக அதிகரித்துள்ளது. மாவட்டம்

முழுவதிலும், மொத்தம் 91 நிவாரண மையங்களில் சுமார் 7 ஆயிரம் பேர் தங்க வைக்கப் பட்டுள்ளனர். நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், ராணுவத்தினர், காவல் துறையினர் மற்றும் மீட்புப் படையினர் தேடுதல் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர். மண் குவியலில் சிக்கியவர்களை கண்டுபிடிக்க, மோப்ப நாய்கள் பயன்படுத்தப் படுகின்றன. இதற்கிடையே, படவேட்டிக்குன்னு பகுதியில், ஒரு பெண் மற்றும் சிறுமி உட்பட 4 பேர் மண் குவியலுக்குள் உயிருடன் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. வயநாடு நிலச்சரிவு குறித்து, அமெரிக்க அதிபர் திருட. ஜோ பைடன் உள்ளிட்டோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

----------------------------------

ஒலிம்பிக் (4)

பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளின் ஆடவர் ஒற்றையர் பேட்மிண்டன் பிரிவில் இன்று, இந்தியாவின் லக்க்ஷயா சென், சீனத் தாய்பே வீரர் Chou Tien Chen-னுடன், காலிறுதி போட்டியில் மோதுகிறார். இந்திய ஆடவர் ஹாக்கி அணி, ஆஸ்திரேலிய அணியுடன் மோதுகிறது.

----------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

**புதுடெல்லி குடியரசுத் தலைவர் மாளிகையில், 2 நாள் ஆளுநர்கள் மாநாடு,** குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தலைமையில், இன்று தொடங்கி உள்ளது.

மத்திய-மாநில அரசுகளுக்கு இடையே திறம்பட்ட பாலமாக ஆளுநர்கள் செயல்பட வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை புதுடெல்லியில், வேளாண் பொருளியல் வல்லுனர்களின் 32ஆவது சர்வதேச மாநாட்டைத் தொடக்கி வைக்கிறார்.

புதுச்சேரியில், இலவச அரிசி மற்றும், மானிய விலையில் அத்தியாவசிய பொருட்கள், ரேஷன் மூலம் வழங்கப்படும் என, முதலமைச்சர் திரு. ரங்கசாமி, பட்ஜெட்டில் அறிவித்துள்ளார்.